2026 பிப்ரவரி மாதம் 04- ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 41/2021

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04- ஆம் தேதி புதன்கிழமை திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 - மதன்குமார் |
| தகப்பனார் பெயர்: | சேகர் |
| ஊர்: | பெருமாள்கவுண்டன்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 35 |

04.02.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:-

நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, பெருமாள்கவுண்டன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 6 வருடங்களுக்கு முன்பு காலை 10.00 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தபோது, எனது உறவினர் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையிலிருந்து தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்து, அப்போது எனது மாமா பாபு என்பவர் இறந்துவிட்டதாகவும், போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு என்னை வரச்சொன்னார்கள். நான் அங்குச் சென்று பார்த்தப்போது, அவர் இறந்த நிலையில் இருந்தார். அவரது உடலில் சிறு சிறு

காயங்கள் இருந்தன. வெளியில் வந்து போலீசாரிடம் விசாரித்தேன். மாமா முதல் நாள் இரவு இருச்சக்கர வாகனத்தை எடுத்துச்சென்றபோது, அந்த இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர் அவரை பிடித்து அடித்ததாக கூறினார். அதன் பின்னர் தேனி, மருத்துக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினோம். பின்பு உறவினரிடம் பிரேதத்தை ஒப்படைத்தனர், வழக்குச் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எனது மாமா பாபு மீது பல்வேறு திருட்டு, அடிதடி, கஞ்சா வழக்குகள் காவல்நிலையத்தில் நிலுவையில் இருந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் வழக்கு நிலுவையில் இருந்தது உண்மை தான். பாபுவிற்கு இரண்டு முறை மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனை சிகிச்சையில் இருந்து வந்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. அவருக்கு வலது கால் மற்றும் வலது இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டு, பிளேட் வைத்திருந்ததால் அவரால் சரிவர நடக்க முடியாமல் இருந்தார் என்றால் கால் உடைந்திருந்தது, ஆனால் நடந்துக்கொண்டு தான் இருந்தார். போலீசார் விசாரைணை நான் மேற்சொன்னவாறு சொல்லிவிட்டு, தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.04 17:58:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.02.2026